குறிப்பிடப்படப்பட்ட இடங்களில் பணிகள் முடிவுற்றும், வரிசை எண்..3ல் குறிப்பிடப்பட்ட இடத்தில் நுண் உரம் செயலாக்க மையம் அமைப்பதற்கு கட்டுமான பணிகள் துவங்கிய நிலையில் அப்பகுதி பொதுமக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருவதனால் வரிசை எண்..3ல் காணும் வார்டு எண்..31 லெட்சத்தோப்பு வடக்கு தெரு பகுதிக்கு பதிலாக மாற்று இடமாக அதே பகுதியில் உள்ள ஜானகிராமன் நகரில் நுண் உரம் செயலாக்க மையம் அமைப்பதற்கும், இப்பணிக்கான பின்னேற்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) தூய்மை இந்தியா திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்கண்ட தேர்வு செய்யப்பட்ட இடங்களில் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்..3385/2019/இ.1

**தீர்மான எண்..403 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..2</u>**

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM)-ன் கீழ் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை சிகிச்சைக்கு நோயாளிகளுடன் வரும் உறவினர்கள் தங்குவதற்கு ஏதுவாக ஜவான் வார்டுக்கு அருகில் சிறப்பு உறைவிடம் கட்டிடம் (Special shelter) அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.70.00 இலட்சத்திற்கு (மத்திய அரசு மான்ய நிதி 60% மற்றும் மாநில அரசு மான்ய நிதி 40%) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM)ன் கீழ் மத்திய அரசு மான்ய நிதி 60% மற்றும் மாநில அரசு மான்ய நிதி 40% நிதி மூலம் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6468/2014/இ1)

**தீர்மான எண்..404 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..3</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..7366/2016/ யுபிஏ2, நாள்.. 03.09.2018ம் தேதிய கடிதத்தில் சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை வரைவு துணை விதிகள் தயார் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பேரில் Street vendor Act 2014 பிரிவு (3)ன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை மாதிரி வரைவு துணைவிதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

# <u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019**

**<u>அறிவிப்பு</u>**

**ந.க.எண்.. 7737/2015/எப்1**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015—ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) துணை விதிகள், 2019 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், பட்டுக்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019 ஏற்படுத்தப்படுகின்றது.

## <u>அத்தியாயம்—1</u>

## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.—** இந்த துணை விதிகள் பட்டுக்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.—** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

**(2)** ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து பட்டுக்கோட்டை நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

**(3)** சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், நீதிமன்றங்கள், நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்

வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்.

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ.எண் | தெரு வியாபாரி வகை இனங்கள் | வியாபார இடத்தின் பரப்பு | வியாபார கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான தெரு வியாபாரி (முழு நேரம்) | **10 சதுர அடி வரை** | **வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.750/– லிருந்து 1% வழிகாட்டி மதிப்பு வரை.** |
| | | **10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை** | **வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.1500/– லிருந்து 2% வழிகாட்டி மதிப்பு வரை.** |
| | | **25 சதுர அடிக்கு மேல்** | **வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.3000/– லிருந்து 3% வழிகாட்டி மதிப்பு வரை.** |
| 2. | நிலையான தெரு வியாபாரி (பகுதி நேரம்) | **10 சதுர அடி வரை** | **வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.375/– லிருந்து 0.5% வழிகாட்டி மதிப்பு வரை.** |

| | | | |
|---|---|---|---|
| | | 10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை | வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.750/– லிருந்து 1% வழிகாட்டி மதிப்பு வரை. |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ.1500/– லிருந்து 1.5% வழிகாட்டி மதிப்பு வரை. |
| 3. | நகரும் தெரு வியாபாரி ( மோட்டார் வாகனம்) | 10 சதுர அடி வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நகரும் தெரு வியாபாரி ( மோட்டார் வாகனம் இல்லாமல்) | 10 சதுர அடி வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 5. | நகரும் தெரு வியாபாரி ( தலைச்சுமை) | –– | வருடத்திற்கு ரூ.250/– |

3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்படும்.

**7. பராமரிப்பு கட்டணம்,–** (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு 100/–க்கு குறையாமலும், ரூ. 300/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4
## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.– (1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,– (1)** விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்..7737/2015/எப்1)

**தீர்மான எண்..405... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>**பொருள் எண்..4**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் கடைகள் மற்றும் குத்தகை உரிம இனங்கள் **2019–20**ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை வாடகை மற்றும் குத்தகை உரிமத் தொகை செலுத்தாத கடைகள் மற்றும் ஒராண்டு தொகையாக வைப்புத்தொகை செலுத்தாத குத்தகை உரிமம் இனங்களை **01.04.2020** முதல் அனுபவித்துக்கொள்ள ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை வெளியிடலாம். எனவே கீழ்க்காணும் கடைகளுக்கு பலமுறை அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டும், நேரில் அறிவுறுத்தியும் கடைகளுக்கான வாடகை மற்றும் குத்தகை இனத்திற்கான உரிமத்தொகை செலுத்தப்படவில்லை. மேலும் கடைகளுக்கான முன்வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே கீழ்க்காணும் கடைகள் மற்றும் குத்தகை இனங்களை ஏலம்விடலாம்.

| **வ.எண்** | **கடைகள் / குத்தகை இனம்** | **வைப்புத் தொகை** | **சொத்து மதிப்பு சான்றிதழ்** | **சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை** |
|---|---|---|---|---|
| 1 | பெரிய கடைத்தெரு கடை எண்.1 | 40635 | 81270 | 40635 |
| 2 | பெரிய கடைத்தெரு கடை எண்.2 | 40635 | 81270 | 40635 |
| 3 | பெரிய கடைத்தெரு கடை எண்.3 | 40635 | 81270 | 40635 |
| 4 | பெரிய கடைத்தெரு கடை எண்.4 | 40635 | 81270 | 40635 |
| 5 | பெரிய கடைத்தெரு கடை எண்.5 | 40635 | 81270 | 40635 |
| 6 | பாரதி நகர் கடைஎண்.1 | 24822 | 49644 | 24822 |
| 7 | பாரதி நகர் கடைஎண்.2 | 24822 | 49644 | 24822 |
| 8 | பாரதி நகர் கடைஎண்.3 | 24822 | 49644 | 24822 |
| 9 | பாரதி நகர் கடை எண்4 | 20286 | 40572 | 20286 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | தஞ்சாவூர் ரோடு கடை எண்.1 | 20286 | 40572 | 20286 |
| 11 | தஞ்சாவூர் ரோடு கடை எண்.2 | 20286 | 40572 | 20286 |
| 12 | தஞ்சாவூர் ரோடு கடை எண்.3 | 20286 | 40572 | 20286 |
| 13 | தஞ்சாவூர் ரோடு கடை எண்.4 | 20286 | 40572 | 20286 |
| 14 | தஞ்சாவூர் ரோடு கடை எண்.5 | 113488 | 226976 | 113488 |
| 15 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.12 | 137819 | 275638 | 137819 |
| 16 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.13 | 159806 | 319612 | 159806 |
| 17 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.14 | 100309 | 200617 | 100309 |
| 18 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.15 | 100309 | 200617 | 100309 |
| 19 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.16 | 79947 | 159894 | 79947 |
| 20 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் கடை எண்.17 | 72702 | 145404 | 72702 |
| 21 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் அறை எண்..1 | 114660 | 229320 | 114660 |
| வ.எண் | கடைகள்/குத்தகை இனம் | வைப்புத் தொகை | சொத்து மதிப்பு சான்றிதழ் | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை |
| 22 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் அறை எண்..2 | 261450 | 522900 | 261450 |
| 23 | புதிய பேருந்து நிலைய முதல் கட்டம் அறை எண்..3 | 261450 | 522900 | 261450 |
| | | | | |
| 24 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,1 | 50904 | 101808 | 50904 |
| 25 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,2 | 50904 | 101808 | 50904 |
| 26 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,3 | 50904 | 101808 | 50904 |
| 27 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்..4 | 53941 | 107881 | 53941 |
| 28 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,5 | 101417 | 202835 | 101417 |
| 29 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,6 | 101480 | 202961 | 101480 |
| 30 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,7 | 69048 | 138096 | 69048 |
| 31 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,8 | 69048 | 138096 | 69048 |
| 32 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,9 | 69048 | 138096 | 69048 |
| 33 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,10 | 69048 | 138096 | 69048 |
| 34 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,12 | 69048 | 138096 | 69048 |
| 35 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,13 | 69048 | 138096 | 69048 |
| 36 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,14 | 69048 | 138096 | 69048 |
| 37 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,15 | 69048 | 138096 | 69048 |
| 38 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,16 | 69048 | 138096 | 69048 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,17 | 69048 | 138096 | 69048 |
| 40 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,18 | 69048 | 138096 | 69048 |
| 41 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,19 | 91728 | 183456 | 91728 |
| 42 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,20 | 69048 | 138096 | 69048 |
| 43 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,21 | 163145 | 326290 | 163145 |
| 44 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,22 | 260051 | 520103 | 260051 |
| 45 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,23 | 278019 | 556038 | 278019 |
| **வ.எண்** | **கடைகள்/குத்தகை இனம்** | **வைப்புத் தொகை** | **சொத்து மதிப்பு சான்றிதழ்** | **சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை** |
| 46 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டம் கடை எண்,24 | 543753 | 1087506 | 543753 |
| 47 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.1 | 28287 | 56574 | 28287 |
| 48 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.2 | 28287 | 56574 | 28287 |
| 49 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.3 | 28287 | 56574 | 28287 |
| 50 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.4 | 28287 | 56574 | 28287 |
| 51 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.5 | 28287 | 56574 | 28287 |
| 52 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.6 | 28287 | 56574 | 28287 |
| 53 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.7 | 28287 | 56574 | 28287 |
| 54 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.8 | 28287 | 56574 | 28287 |
| 55 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.9 | 28287 | 56574 | 28287 |
| 56 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.10 | 19656 | 39312 | 19656 |
| 57 | தலைமை தபால் நிலைய ரோடு கடைஎண்.11 | 30870 | 61740 | 30870 |
| 58 | தலைமை தபால் நிலைய ரோடு (காலிமனைகீழக்கு) | 30870 | 61740 | 30870 |
| 59 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.1 | 30870 | 61740 | 30870 |
| 60 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.2 | 30492 | 60984 | 30492 |
| 61 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.3 | 30492 | 60984 | 30492 |
| 62 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.4 | 69300 | 138600 | 69300 |
| 63 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.4A | 32130 | 64260 | 32130 |

| | | | | |
|---|---|---|---|---|
| 64 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடை எண்.5 | 30492 | 60984 | 30492 |
| 65 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடைஎண்.6 | 30492 | 60984 | 30492 |
| 66 | பழைய பேருந்து நிலைய ஐ.டி.எஸ்.எம். டி கடைஎண்.7 | 53550 | 107100 | 53550 |
| 67 | பழைய பேருந்து நிலைய ஐ.டி எஸ். எம். டி கடைஎண்.8 | 53550 | 107100 | 53550 |
| 68 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.1 | 53550 | 107100 | 53550 |
| 69 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.2 | 53550 | 107100 | 53550 |
| 70 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.3 | 53550 | 107100 | 53550 |
| **வ.எண்** | **கடைகள்/குத்தகை இனம்** | **வைப்புத் தொகை** | **சொத்து மதிப்பு சான்றிதழ்** | **சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை** |
| 71 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.4 | 53550 | 107100 | 53550 |
| 72 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.5 | 59724 | 119448 | 59724 |
| 73 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.6 | 69489 | 138978 | 69489 |
| 74 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.7 | 69489 | 138978 | 69489 |
| 75 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.8 | 86738 | 173477 | 86738 |
| 77 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.9 | 53550 | 107100 | 53550 |
| 78 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.10 | 69426 | 138852 | 69426 |
| 79 | புதிய பேருந்து நிலைய மூன்றாம் கட்டம் கடை எண்.11 | 69426 | 138852 | 69426 |
| 80 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட முதல் தளம் கடை எண்.4 | 54810 | 109620 | 54810 |
| 81 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட முதல் தளம் கடை எண்.6 | 54810 | 109620 | 54810 |
| 82 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட முதல் தளம் கடை எண்.7 | 51156 | 102312 | 51156 |
| 83 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட முதல் தளம் கடை எண்.8 | 51156 | 102312 | 51156 |
| 84 | புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட முதல் தளம் கடை எண்.9 | 51156 | 102312 | 51156 |
| 85 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.1 | 19971 | 39942 | 19971 |
| 86 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.2 | 28350 | 56700 | 28350 |
| 87 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.3 | 28350 | 56700 | 28350 |
| 88 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.4 | 24570 | 49140 | 24570 |
| 89 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.5 | 26964 | 53928 | 26964 |

| | | | | |
|---|---|---|---|---|
| 90 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.6 | 13230 | 26460 | 13230 |
| 91 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.7 | 40635 | 81270 | 40635 |
| 92 | தலைமை தபால் நிலைய ரோடு பிளாட் கடைஎண்.8 | 40635 | 81270 | 40635 |
| 93 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.1 | 25000 | 50000 | 10000 |
| **வ.எண்** | **கடைகள்/குத்தகை இனம்** | **வைப்புத் தொகை** | **சொத்து மதிப்பு சான்றிதழ்** | **சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை** |
| 94 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.3 | 25000 | 50000 | 10000 |
| 95 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.12 | 25000 | 50000 | 10000 |
| 96 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.13 | 25000 | 50000 | 10000 |
| 97 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.14 | 25000 | 50000 | 10000 |
| 98 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.15 | 25000 | 50000 | 10000 |
| 99 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.16 | 25000 | 50000 | 10000 |
| 100 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.17 | 25000 | 50000 | 10000 |
| 101 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.18 | 25000 | 50000 | 10000 |
| 102 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.19 | 25000 | 50000 | 10000 |
| 103 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.20 | 25000 | 50000 | 10000 |
| 104 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.21 | 25000 | 50000 | 10000 |
| 105 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.22 | 25000 | 50000 | 10000 |
| 106 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.27 | 25000 | 50000 | 10000 |
| 107 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.29 | 25000 | 50000 | 10000 |
| 108 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.30 | 25000 | 50000 | 10000 |
| 109 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.31 | 25000 | 50000 | 10000 |
| 110 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.32 | 25000 | 50000 | 10000 |
| 111 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.33 | 25000 | 50000 | 10000 |
| 112 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.35 | 25000 | 50000 | 10000 |
| 113 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.36 | 25000 | 50000 | 10000 |
| 114 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.37 | 25000 | 50000 | 10000 |
| 115 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.38 | 25000 | 50000 | 10000 |
| 116 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.39 | 25000 | 50000 | 10000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 117 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.40 | 25000 | 50000 | 10000 |
| வ.எண் | கடைகள்/குத்தகை இனம் | வைப்புத் தொகை | சொத்து மதிப்பு சான்றிதழ் | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை |
| 118 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.41 | 25000 | 50000 | 10000 |
| 119 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.42 | 25000 | 50000 | 10000 |
| 120 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.44 | 25000 | 50000 | 10000 |
| 121 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.45 | 25000 | 50000 | 10000 |
| 122 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.46 | 25000 | 50000 | 10000 |
| 123 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.52 | 25000 | 50000 | 10000 |
| 123 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.53 | 25000 | 50000 | 10000 |
| 124 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.54 | 25000 | 50000 | 10000 |
| 125 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.55 | 25000 | 50000 | 10000 |
| 126 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.57 | 25000 | 50000 | 10000 |
| 127 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.58 | 25000 | 50000 | 10000 |
| 128 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.59 | 25000 | 50000 | 10000 |
| 129 | அஞ்சா நெஞ்சன் அழகிரி மார்கெட் கடை எண்.60 | 25000 | 50000 | 10000 |
| 130 | நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறைக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். (3ம் கட்டம்) | 30,000— | 60,000— | 30,000— |
| 131 | நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள முதல் கட்ட இடத்தில் மனிதர்கள் எடை பார்த்து க்கொள்ளும் இயந்திரம் ஒன்று மட்டும் வைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 5,000— | 10,000— | 5,000— |
| 132 | நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகம் காந்தி பூங்கா மற்றும் நகராட்சி எல்லைக்குள் டாக்ஸிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 25,000— | 50,000— | 25,000— |

| | | | | |
|---|---|---|---|---|
| 133 | தனியார் ஆடடிக்கும் தொட்டியில் வதை செய்யும் ஆடுகளுக்கு சீல்வைத்து தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 50,000– | 1,00,000– | 50,000– |
| 134 | நகராட்சி வண்டிப்பேட்டையில் குடிநீர் மேல்நிலை தொட்டி உள்ள இடம் மற்றும் தஞ்சாவூர் ரோட்டையும், ஆனைவிழுந்தான் குளம் ரோட்டையும் இணைக்கும் வண்டிப்பேட்டை சாலை நீங்கலாக வண்டிப் பேட்டை யில் வரும் வண்டிகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். | 2,25,000– | 4,50,000– | 2,25,000– |
| 135 | நகராட்சி மினிலாரிகள் நிறுத்துமிடம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். (ஸ்ரீ.வெங்கிடுசுப்பையா தேவஸ்தான இடம்) | 50,000– | 1,00,000– | 50,000– |
| 136 | நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்குள் **உள்ள** தொலை காட்சிப்பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 250000 | 500000 | 250000 |
| | | | | |

மேலும் 29.02.2020க்கு முன் மேற்படி கடைகளுக்கு வாடகைத் தொகை, குத்தகை இனத்திற்கான உரிமத் தொகை மற்றும் ஓராண்டிற்கான முன் வைப்புத் தொகை ஆகியவற்றினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டால் அந்த கடைகள்/உரிமத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றப்பொருளில் தெரிவித்தபடி நடவடிக்கை எடுக்க அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..0363/2018/அ2) |

**தீர்மான எண்..406 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . மேலும் வாடகை மற்றும் வைப்புத் தொகை செலுத்தப்பட்டதில் அக்கடைகளுக்கு மட்டும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தேவையில்லை.**

**<u>பொருள் எண்..5</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு JCB வாகனம் T.N.49P.4003 வாகனத்திற்கு வரும் **13.02.2020** உடன் ஓராண்டு இன்சூரன்ஸ் கால அவகாசம் முடிவடைவதனால், மேலும் ஓராண்டிற்கு புதுப்பித்திட வேண்டி The Oriental Insurance நிறுவனத்திற்கு ரூ.**12,171/—**ஐ செலுத்திட வேண்டி கேட்பு வரப்பெற்றுள்ளது. ஆகவே மேற்படி வாகனத்திற்கு ஓராண்டு காலம் இன்சூரன்ஸ் புதுப்பித்திட தொகை ரூ.**12,171/—**ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர்/தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..**1222/2008**/எச்**1**) |

**தீர்மான எண்..407 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

(ஒம்)கா.சுப்பையா
ஆணையர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர்
பட்டுக்கோட்டைநகராட்சி.